உள்ள தொழிலாளர்களுக்கு, தமிழ்நாடு மின் வாரியத்தில் உள்ளதுபோன்ற சலுகைகள் அளிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? கும்பகோணத்திலுள்ளவர்களுக்கு மற்றவர்களுக்கு, மற்றத் தொழிலாளர்களுக்கு அளிப்பதுபோல் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தகவல் இல்லை.

## மின்வாரியப் பொறியாளர் தேர்வு

*வினா 487—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975 ஆம் ஆண்டு மின்சார வாரியத்தில் எத்தனை பொறியாளர்கள் தேர்வு பெற்றார்கள்?

(ஆ) எத்தனை பேர் வேலையில் சேர்க்கப்பட்டனர்?

(இ) தேர்வு வரிசைப்படி வேலையில் சேர்க்கப்பட்டனரா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) 250 நபர்கள்.

(ஆ) 212 நபர்கள் தான் வேலையில் சேர்ந்தனர்.

(இ) ஆம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வேலைக்கு அமர்த்தப்படாமல் இருந்தார். ஆனால் நான் அதைப்பற்றி விவரங்களை அறிய விரும்பவில்லை. இருந்தாலும், சீனியாரிட்டி செலக்ஷன் லிஸ்ட் அடிப்படையில் சீனியாரிடி கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சீனியாரிடிபடித்தான் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவலை தந்திருக்கிறார்கள். வேறு விவரங்கள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து எழுதித் தந்தால் **தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**